- திரவங்கள் திட்டமான கனவளவைக் கொண்டிக்கும் எனினும் திட்டமான வடிவம் காணப்படாது.
- வாயுக்குத் திட்டமான வடிவம், திட்டமான கனவளவு காணப் படாது.
- திண்மப் பதார்த்தங்களில் உள்ள பல்வேறு சிறப்பியல்புகள் காரணமாக அவை அன்றாட வாழ்வில் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

## பயிற்சி

01. பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

i. திணிவைக் கொண்டதும் வெளியில் இடத்தை எடுத்துக் கொள்வதுமான பொருள்கள் ......................... எனப்படும்.

ii. ஒளி .............. வடிவத்திற்கு உதாரணமாகும்.

iii. சடப்பொருள்கள் ............................ என மூன்று பௌதிக நிலைகளில் காணப்படுகின்றன.

iv. திண்மத்திற்குத் திட்டமான ...................... திட்டமான .............. உண்டு.

v. .................... திட்டமான வடிவம் காணப்படாவிட்டாலும் திட்டமான கனவளவு உண்டு.

vi. இருக்கும் பாத்திரத்தின் முழுக்கனவளவையும் .................. கொண்டுள்ளது.

02. சரியான விடையைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

i. நொருங்கும் திரவியம் ........................ ஆகும்.
(கண்ணாடி, இறப்பர், செம்பு)

ii. அதிக வன்மைத்தன்மையைக் கொண்டது ........................ ஆகும்.
(களி, வைரம், இறப்பர்)



LIVEWORKSHEETS